## சோழமாதேவி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் அவர்களின் நடவடிக்கைகள்

**பிறப்பிப்பவர் : திரு.R.சாகுல்அமீது தலைவர்**

**அனுமதி எண் : 01 /2023-2024 நாள் : 04.03.2024**

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு -திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் வட்டாரம் - சோழமாதேவி ஊராட்சி - சோழமாதேவி கிராமம் க.ச.எண் 171/A2C1A2 -ல் 1.20 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக

பார்வை : 1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் (பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்D6149EGI/2023 /TCP நாள் 21.10.2023

2. சார் பதிவாளர் அலுவலக தானப்பத்திர ஆவணம் எண் 4110 , 4111 நாள் 25.09.2023.

**உத்திரவு :-**

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் வட்டாரம் சோழமாதேவி ஊராட்சி சோழமாதேவி கிராமம் க .ச.எண் 171/A2C1A2 -ல் 1.20 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் திரு.A.S.சாந்து முகம்மது மற்றும் இருவர் 1/111A சோழமாதேவி அவர்கள் குடியிருப்பு மனைகள் அமைத்துக்கொள்ள பார்வை 1-ல் காணும் திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்கள் நிபந்தனைகளுடன் கூடிய தொழில்நுட்ப அனுமதியின்படி கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை மற்றும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) திருப்பூர் மண்டலம் அவர்களின் பார்வையில் காணும் மனைப்பிரிவு வரைபட அனுமதியில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.
2. எக்காரணத்திற்காக வரைபடம் அங்கீகரிக்கப்பட்டதோ அக்காரணம் தவிர வேறு எந்த காரணத்திற்கும் உபயோகிக்க கூடாது.
3. மனைப்பிரிவு உரிமம் வழங்க அனுதிக்கப்பட்ட கட்டணம் தவிர ஏதாவது கட்டணங்கள் செலுத்தப்படவேண்டுமென அறிவித்தாலும்,கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டதாக அறியப்பட்டாலும் அடிப்படை வசதிகளில் ஏதும் மாற்றம் இருந்தாலும் அதற்கான தொகை அறிவிப்பு கிடைத்த ஏழு தினங்களுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியது உரிமையாளரது பொறுப்பாகும்.
4. மனைப்பிரிவில் அமையும் மனைகள் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடதத்திற்கும் இவ்வூராட்சியில் அனுமதி பெற்று கட்டப்படவும்,கட்டிடப்பணி முடிவுற்றவுடன் வீட்டு வரி செலுத்தவும் வேண்டும்.
5. மனைப்பிரிவில் அமைக்கப்படும் ஒவ்வொரு கட்டிடத்திலும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.
6. மத்திய மாநில அரசின் இதர துறைகளின் அனுமதி எந்த ஒரு நிலையிலும் தேவைப்படின் அதனையும் பெற்று மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
7. மேலே கண்ட நிபந்தனைகள் ஏதாவது அல்லது முழுவதும் மீறப்பட்டாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து மாறுபட்டு மனைப்பிரிவு அமைக்கப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின்படி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் அபராதத்திற்கு உட்பட்டவராவர்.

மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் மனைப்பிரிவு அங்கீகரித்த தீர்மானம் எண் நாள் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம்/எவ்வித விடுதலுமின்றி மனைப்பிரிவு நுழை வாயிலில் 6'*4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு பிரசுரிக்கப்பட வேண்டும்.

9. EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றியமைக்கவோ கூடாது.
10. வரைபடம் அங்கீகாரம் 1994-ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊரக மற்றும் நகரமைப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டதாகும்.
11. மேற்கண்ட நிபந்தனைகள் தவிர அவ்வப்போது அரசினாலோ ஊராட்சி மன்றத்தினாலோ ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.
12. நில உபயோக மாற்றத்திற்கான தொகை சந்தை மதிப்பில் 3% ரூ 19000 /- சலான் எண் 20231229008514 நாள் 29.12.2023 -ன்படி உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.
13. பரிசீலனை கட்டணம் மற்றும் அபிவிருத்திக்கட்டணம் ரூ 60000 /- ஊராட்சிநிதி கணக்கு எண் -ல் வங்கி வரைவோலை எண் 086579 நாள்04.03.2024 ன்படி தொகை செலுத்தப்பட்டுள்ளது
14. பார்வை 1 -ல் காணும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும் இதன் நகல் வீட்டு மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.
15. மேலே கண்ட நிபந்தனைகளில் எவையேனும் மீறப்பட்டதாக அறியப்பட்டாலோ,அல்லது நாளது தேதியில் வழக்குகள் நடைபெற்று வருவதாக பின்னர் தெரிய வந்தாலோ வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கான அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

தலைவர்/செயல் அலுவலர்,
தலைவர் / செயல் அலுவலர்
சோழமாதேவி ஊராட்சி,
சோழமாதேவி ஊராட்சி
மடத்துக்குளம் ஒன்றியம்.

இணைப்பு : அங்கீகரிக்கப்பட்ட மனை வரைபடம் 1
மனைப்பிரிவு நிபந்தனைகள் 1

பெறுநர்: திரு.A.S.சாந்து முகம்மது மற்றும் இருவர்
1/111 A சோழமாதேவி
மடத்துக்குளம் வட்டம்
திருப்பூர் மாவட்டம்

நகல் : 1. நகர் ஊரமைப்பு துணைஇயக்குநர் (பொ) திருப்பூர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருப்பூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. கணியூர் ,சார்பதிவாளர் அலுவலகம்
4. வட்டார வளர்ச்சி அலுவலர் மடத்துக்குளம்.